செய்தித் தணிக்கை

* 331 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்படும் செய்திகளை தணிக்கை செய்வதற்கான புதிய ஏற்பாடுகள் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. மாதவன் : தற்போது பத்திரிகைகளில் வரும் செய்தியைப் பரிசிலிக்க, ஊழல் இருந்தால் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க என்ன வகை செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : செய்தி விளம்பரத் துறையில் ஓர் அதிகாரி இருக்கிறார். ஜில்லா அளவில் கலெக்டர் இருக்கிறார். இன்னும் சி.ஐ.டி. பிராஞ்சை சேர்ந்தவர்கள் பரிசிலனை செய்து வருகிறார்கள். போலீஸ் கமிஷனர் அவர்களும் கவனம் செலுத்தி வருகிறார்.

பஞ்சாயத்துத் தேர்தல்கள்

* 332 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நடைபெற்ற பஞ்சாயத்து தலைவர் தேர்தல்களின்போது ஆட்கள் கடத்திச்செல்லப்பட்டார்களென வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், எத்தனை வழக்குகள், எங்கெங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) ஆட்களைக் கடத்திச் சென்றதாக சுமார் 50 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ள போலீஸ் நிலையங்களின் பெயர்களுடன் மாவட்டவாரியான தகவல்கள் அடங்கிய விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : இந்த வழக்குகள் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்று இருக்கின்றன. பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம்தான் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் பதிவு செய்யப்படாத சம்பவங்களும் அநேக இடங்களில் இருக்கின்றன. இதற்குக் காரணமே உறுப்பினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதாக வைத்திருக்கும் முறைதான். அதை

---

a 431–433-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

மாற்றி பொதுமக்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு கோ. பூவராகன் : பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்களின் போது ஆட்கள் கடத்திச் செல்லப்பட்டார்களென எத்தனை வழக்குகள், எங்கெங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதுதான் கேள்வி. அதற்கான விவரம் கொடுத்துள்ளேன்.

இரண்டாவதாக, எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்ல முடியாது. கோயம்புத்தூர், கன்னியாகுமரி, நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் இதுபோல எந்த விதமான வழக்கும் பதிவு ஆகவில்லை.

மூன்றாவதாக, தற்போதுள்ள தேர்தல் முறையை எந்தவிதமாகவும் மாற்றுவதாக இல்லை.

திரு. செ. மாதவன் : இப்படிப்பட்ட ஆள்தூக்கும் படலம் இருக்கக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி முதல் அமைச்சர் அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். கனம் காமராஜ் அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். அவை இரண்டுமாவது பரிசீலனை செய்யப்பட்டனவா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அந்த இரண்டு பேர்களுடைய கருத்தும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இப்போதுள்ள முறையை தற்போது மாற்றுவதாக இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரப்படியே 50 பேர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள். இப்படிக் கடத்திச் செல்லப்பட்டவர்கள் பத்திரமாக பிறகாவது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்களா ? இல்லை என்றால் எத்தனை பேர் இன்னும் உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவில்லை என்கிற விவரம் தெரிந்து கொள்ள முடியுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அந்த விவரம் என்னிடம் இல்லை.

திரு. கோ. சி. மணி : கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டியலில் மதுரையைப் பொறுத்த வரையில் 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர, அவை எந்த, எந்த இடத்தில் என்கிற விவரம் இல்லை. அதற்குக் காரணம் போலீஸ் இலாகா அந்தத் தகவலை அறிவிக்கவில்லையா ? நமது அரசாங்கமே அந்த விவரத்தைக் கொடுக்கவில்லையா ?

கனம் திரு. கோ. பூவராகன் : கலெக்டரிடமிருந்தே அந்தத் தகவல் வரவில்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள தேர்தல் முறையை மாற்றுவதற்கில்லை என்றாலும் உறுப்பினர், தலைவர், பெருந்தலைவர் தேர்தல்களுக்கிடையே உள்ள நாட்களைக் குறைத்து அவற்றை அடுத்தடுத்து நடைபெறச் செய்தால் ஆட்களைக் கடத்தும் தொல்லை குறையலாம் அல்லவா ?

6th November 1965]

கனம் திரு. கோ. பூவராகன் : இது கேள்வி இல்லை. யோசனை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, தலைவர் தேர்தலுக்குள் உறுப்பினர்களைக் கடத்தும் தொல்லை துரதிருஷ்டமானதாக இருக்கிறது. தற்போதுள்ள தேர்தல் முறையை உடனடியாக மாற்றுவிட்டாலும் பின்னுலாவது மாற்றுகிற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இது பின்னுல் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

** 333 கேள்வி.*—**திரு. செ. மாதவன் :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) அண்மையில் நடைபெற்ற ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியப்புத் தலைவர்கள், தேர்தல்களின்போது வன்முறைகள் கையாளப்பட்டன வென்று புகார்கள் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், தேர்தல் முறைகளை மாற்றியமைக்கும் திட்டம் ஏதேனும் இம்மாநில அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலின்போது சில வன்முறைச் செயல்கள் நடந்ததாக அரசாங்கத்திற்கு அறிக்கைகள் கிடைத்துள்ளன. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தலில் அத்தகைய அறிக்கைகள் எவையும் பெறப்படவில்லை.

(இ) இல்லை.

திரு. செ. மாதவன் : இந்த வன்முறைச் செயல்கள் நடைபெற்றதற்கு இடமாற்றம் ஒரு காரணம். இப்போதுள்ள விதிகளின்படி தேர்தல் எந்த இடத்தில், எந்தத் தேதி நடைபெறும் என்பதாக முதலில் அறிவிக்கப்படக் கூடும். அந்த இடத்தில் அந்தத் தேதி தேர்தலை நடத்தாமல் ஒத்திவைத்துவிட்டால்—அப்படி ஒத்திவைக்க அதிகாரம் இருக்கிறது—பிறகு எந்தத் தேதியில் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்க விதி இருக்கிறதே தவிர அதில் இடம் குறிப்பிடப்பட வேண்டும் என்று இல்லை. அதனுல்தான் வன்முறைச் செயல்கள் நடைபெற இடமேற்படுகிறது. தேதியும், இடமும் அறிவிக்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : எந்தத் தேதி, எந்த இடத்தில் தேர்தல் நடைபெறும் என்பதாக தலைவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அதன்படித்தான் நடைபெற்று வருகிறது.

திரு. செ. மாதவன் : முன்னுலே அதுபோல அறிவிப்புக் கொடுத்துவிட்டாலும் அந்த இடத்தில் அன்றைக்குத் தேர்தல் நடைபெறுவிட்டால், வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படித் தேர்தலை மாற்றுகிறபோது தேதி அறிவிக்கப்படுகிறதே தவிர, இடம் அறிவிக்கப்படுவதில்லை.